# வள்ளுவம் வழி ஆளுமைத்திறன் மேலாண்மை

**முனைவர் இரா.தீபக் ரிஷாந்த்**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர்.**
**phoenixrishanth@gmail.com**

14

**ஆய்வுச் சுருக்கம்**

வான் புகழ் வள்ளுவனின் திருக்குறள் காலம்தோறும் மாறிவரும் சமூகத்திற்கேற்ப தனது பொருண்மையில் பொருள் கொள்ளும் தன்மையால் எக்காலத்திற்கும் பொருந்தும் உயர்தனி இலக்கியமாகத் திகழ்கிறது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் ஒவ்வொருவரும் தன்னை உயர்த்திக் கொள்ளவும் மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளவும் திருக்குறள் பல்வேறு ஆளுமைத்திறன் கருத்துக்களைக் கூறியுள்ளது என்றால் அது மிகையல்ல. அந்த வகையில் திருக்குறள் ஆரவாரமில்லா எளிய தோற்றமும் நுண்ணிதின் ஆய்ந்தறியும் அறிவும், பொறுமையுடன் காலமறிந்து சோர்வில்லாமல் முயற்சி செய்து, நற்பண்களும் சிறந்து பேச்சாறலுடனும் செயல்படவேண்டும் என்று ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என இக்கட்டுரை முடிவாக வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**

முன்னுரை - எளிமை - நுண்ணிய அறிவு - நல்லனவற்றைக் கேட்டல் - ஆராய்ந்த அறிவு – முன்னெச்சரிக்கை - சிந்தித்துச் செயல்படல் – பொறுமை - இடம் அறிதல் - ஒருவரைத் தெளிவாக அறிதல் - மதிப்பீடு - ஊக்கம் - சோர்வின்மை – முயற்சி – பேச்சாற்றல் – நற்பண்பு - முடிவுரை

**முன்னுரை**

தனிமனித முன்னேற்றமே ஒரு சமூகத்தின் முன்னேற்றமாக கருதப்படுகின்றது. ஒரு சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாக இருக்கிறான் என்றால் நிச்சயம் அச்சமூகம் அசைக்க முடியாத உறுதியுடன் இருக்கும். உள்ளத்தளவில் ஒருவர் ஆரோக்கியம் பெற அவரது ஆளுமைத் திறன்) சிறந்து இருத்தல் அவசியம். திருக்குறளில் வள்ளுவன் சொன்ன அனைத்துமே நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆளுமைத்திறனை எடுத்துக்காட்டினாலும் அவற்றில் சிலவற்றை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அதிலும் ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை போன்ற அதிகாரங்கள் முழுவதும் ஆளுமைத் திறனை விளக்குவதைக் காணலாம்.

**எளிமை**

எளிமையான தோற்றம் கொண்ட பலரே நம் நாட்டில் சிறந்த தலைவர்களாக இருந்துள்ளனர். எளிமை என்பது சிறந்த தலைமைப் பண்பாக கொள்ளலாம். இதை வள்ளுவர்,

**‘காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**

**மீக்கூறும் மன்னன் நிலம்'. (குறள் 386)**

என்று உரைக்கிறார். காண்பதற்கு எளியவனாய் கடுஞ்சொல் பேசாதவனாய் இருந்தால், அம்மன்னனின் நாட்டை உலகத்தார் உயர்த்திக் கூறுவர் என்னுமாறு அமைந்த இக்குறளில் 'காட்சிக்கெளியன்' என்னும் சொல்லுக்கு எளியதோற்றம், மற்றவர் ஒரு அரசனை அணுகுதல் எளிமையாக இருத்தல் என்று இருவிதங்களிலும் பொருள் கொள்ளலாம். எளிமை என்பது ஒருவனது ஆளுமையை உயர்த்திக் காட்டும்.

**நுண்ணிய அறிவு**

எதையும் ஆழமாக பார்க்கும் அறிவே உண்மையான அறிவு. அதுவே ஒருவனை மேன்மேலும் சிந்திக்க வைக்கும். என்பதை வள்ளுவன் அன்றே எடுத்துக்காட்டியுள்ளார்.

**'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**

**மண்மாண் புனைபாவை யற்று'. (குறள் 407)**

நுட்பமான மாட்சியையுடைய ஆராயவல்ல அறிவு இல்லாதவனுடைய அழகின் சிறப்பு, மண்ணால் செய்யப்பட்ட சிறந்த பாவையைப் போன்றது.

**நல்லனவற்றைக் கேட்டல்**

ஒரு சிறந்த ஆளுமை என்பது ஒருவருடைய நல்ல குணங்களைச் சார்ந்தே அமைகின்றது, நல்ல குணங்கள் என்பது ஒருவரின் சூழலைப் பொறுத்து இருக்கும். அது ஒருவரின் பேச்சு, செயல் அனைத்திலும் வெளிப்படும் நாம் கேட்கும் செய்திகள் கூட நன்மை உடையதாய் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்,

எனைத்தானும் நல்லவைக் கேட்க அனைத்தானும்

ஆன்ற பெருமை தரும். (குறள் 416)

என்னுமாறு கூறுகிறார். எத்துணைச் சிறியதானாலும் நல்லனவற்றைக் கேட்டல் வேண்டும். கேட்ட அளவிற்கு ஏற்ப நிறைந்த பெருமை தரும். சிறந்த கருத்துக்களை விரும்பிக் கேட்கும் பண்பே ஒருவனை சிறந்த மனிதனாக மாற்றும்.

**ஆராய்ந்த அறிவு**

எதையும் அப்படியே ஏற்காமல் அதன் நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்தல் என்பது ஆளுமையில் அவசியமான ஒன்று. இல்லையேல் அது மிகுந்த இடரைத் தரும்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)**

எப்பொருளை யார்யாரிடத்தில் கேட்டாலும், அப்பொருளின் உண்மைப் பொருளை உணர்வதே அறிவு என்பதை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் விவரித்துள்ளார்.

**முன்னெச்சரிக்கை**

எந்த ஒன்றிலும் ஒரு துன்பம் வரும் முன்பே அதைக் குறித்து அறிந்து, அதைத் தடுத்து

விடுதல் சிறந்த அ;றிவாகும். இதை,

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**

**வைத்தூறு போலக் கெடும். (குறள் 435)**

என்னுமாறு வள்ளுவர் குறிப்பிடுகிறார். குற்றம் வரும்முன்னே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் நின்ற வைக்கோல் போர் போல் அழிந்து விடும்.

**சிந்தித்துச் செயல்படல்**

சிந்திக்காமல் செய்யும் செயல்கள் கடுமையான பாதிப்புகளை உருவாக்கும். ஒரு செயலால் ஏற்படும் நன்மை தீமைகளை தெளிவாக அறிந்த பின்னரே அதனை செய்யத் தொடங்குதல் வேண்டும். அதுவே மிகச் சிறந்த ஆளுமை.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு - (குறள் 467)**

செய்யத் தகுந்த செயலைத் தொடங்குமுன் ஆலோசித்துத் தொடங்குக. தொடங்கிய பிறகு ஆலோசிப்போம் என்பது குற்றமாகும்.

**பொறுமை**

பொறுமையின் பெருமையினை ‘பொறுத்தார் பூமி ஆள்வார்’ என்று உயர்த்திக் கூறுவர். பொறுமை என்பதை ஒருவர் செய்த தவறை பொறுத்துக் கொள்வது, என்று பொதுவாகப் பார்த்தாலும் ஆளுமையில், எந்த நிலை வந்தாலும் ஒருவன் தன் மனநிலையை சமநிலையில் வைத்திருத்தலே பொறுமை என்று பார்க்கப்படுகிறது.

**காலம் கருதி இருப்பர் கலங்காது**

**ஞாலம் கருது பவர் – (குறள் 485)**

உலகத்தைக் கொள்ள நினைப்பவர், அதைப் பற்றிக் கலங்காது அதற்கான காலத்தைக் கருதி பொறுத்திருப்பர். வள்ளுவர் மற்றொரு குறில் ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல’ ஒருவர் பொறுமையுடன் இருத்தல் வேண்டும் என்று கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

**இடம் அறிதல்**

எவரொருவர் தன்னைத்தானே ஆழமாக அறிந்து, தன் பலம், பலவீனம், சூழல் போன்றவற்றை மதிப்பீடு செய்து வைத்திருக்கிறாரோ அவரே சிறந்த பலசாலி, இப்பண்பு இல்லையேல் அது கொடிய துன்பத்தில் விடும். இதையே வள்ளுவர்,

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**

**நீங்கின் அதனைப் பிற. - (குறள் 495)**

என்று உரைக்கிறார். ஆழமான நீரில் முதலை பிற உயிர்களை வெல்லும்: அது முதலைக்கான இடம். அந்நீரினின்று அது நீங்கினால் அதைப் பிற உயிர்கள் வெல்லும். அது

முதலைக்கு ஆகாத இடம்.

**ஒருவரைத் தெளிவாக அறிதல்**

உலக வாழ்கை என்பது எல்லா உயிர்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இன்னோர் உயிரைச் சார்ந்தே இருக்கிறது. சிறந்த ஆளுமையில் ஒரு மனிதனுக்கு அவனை அவனே மதிப்பிடுதல் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு அவன் பிறரையும் அறிந்து வைத்திருத்தல் அவசியம்.

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**

**மிகைநாடி மிக்க கொளல். - (குறள் 504)**

ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, குற்றங்களை ஆராய்ந்து, அவற்றில் மிகுதியானவற்றை ஆராய்ந்து, மிகுதியானவற்றைக் கொண்டு அவனை தெளிவாக அறிதல் வேண்டும்.

**மதிப்பீடு**

ஒரு செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் முன்பே அச்செயலை அவரால் செய்ய இயலுமா என்பதை அறிந்து செயல்பட வேண்டும். அதுவே மற்றவரைப் பற்றிய தெளிவான புரிதல் ஆகும்.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல். - (குறள் 517)**

இச்செயலை இக்கருவியால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்த பிறகே அவனிடம் அத்தொழிலை விடல் வேண்டும்.

**ஊக்கம்**

ஊக்கம் என்ற ஒன்றினை ஆளுமையில் இரு விதங்களில் காணலாம். அது தன்னைத்தானே ஊக்கப்படுத்திக் கொள்வதும், பிறரை ஊக்கப்படுத்துவதும் ஆகும்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**

**உள்ளத் தனையது உயர்வு. - (குறள் 435)**

நீர்ப் பூக்களின் தண்டின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும். மனிதர்க்கு ஊக்கத்தின் அளவினதாகவே உயர்ச்சியும் இருக்கும்.

**சோர்வின்மை**

சோம்பலில் சிக்கிய ஒருவரால் ஒருபோதும் சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக இருக்க முடியாது. இதை,

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**

**கெடுநீரான் காமக் கலன். - (குறள் 6055)**

காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், நித்திரை ஆகிய நான்கும் அழிவைத் தரும்.

**முயற்சி**

ஆளுமைத்திறன்களில் மிகவும் முக்கியமான பண்பு முயற்சி ஆகும். ஒவ்வொரு வெற்றிக்கும் முயற்சியே அடிப்படையாக அமைந்திருப்பதைக் காணலாம். முயற்சி என்ற ஒன்று மட்டும் இல்லை என்றால். மனித இனம் முன்னேற்றத்தைக் கண்டிருக்காது.

**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும். - (குறள் 616)**

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தை உண்டாக்கும்: முயற்சி இன்மை அவனுக்கு வறுமையைத் தரும்.

**பேச்சாற்றல்**

ஆளுமைத்திறனில் இன்றியமையாத ஒன்று ஒருவரின் பேச்சாற்றல் ஆகும். ஒருவர் பேசும் விதமே அவரின் தன்னம்பிக்கையின் வெளிப்பாடாக இருக்கும். சொற்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று அன்றே வள்ளுவரும் உரைத்துள்ளார்.

**சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**

**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. – (குறள் 645)**

பிறிதோர் சொல் தான் சொல்லப் போகும் அச்சொல்லை வெல்லும் சொல்லாக இல்லாதிருத்தலை அறிந்த பிறகே சொல்ல வேண்டும். இதையே, ‘உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்’ என்னுமாறு பாரதியும் குறிப்பிடுகிறார்.

**நற்பண்பு**

**‘மனிதம்’**என்னும் சொல்லுக்கு பொருள் நோக்கின் அதில் மனிதற்குரிய நற்பண்புகள் என்பது மறைந்து இருக்கும். நற்பண்புகள் இல்லையேல் அவர்களை ‘மரம்’ என்று பிறிதொரு குறளில் வள்ளுவரும் கூறியுள்ளார்.

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**

**கலந்தீமை யால்திரிந் தற்று. - (குறள் 1000)**

நற்பண்பு இல்லாதவன் பெற்ற மிகுந்த செல்வம், நல்ல பால் வைக்கப்பட்ட பாத்திரத்தின் தீமையால் கெடுதலைப் போல அழிந்து போகும்.

**முடிவுரை**

ஒரு மனிதனை சிறந்த நிலைக்கு கொண்டு செல்வதில் ஆளுமைத்திறன் மிகவும் முக்கியமானதாகும். மனிதர்கான இவ்வாளுமைத் திறன்கள் இல்லாமல் போனால் அச்சமூகம் இழிந்த நிலைக்குச் செல்லும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றி தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட வள்ளுவரையும், வள்ளுவத்தையும் பெற்றது தமிழின் சிறப்பு. ஆராய்ந்து நோக்கின் இக்கட்டுரையில் கூறப்பட்டது மட்டுமல்லாமல் அவர் சொன்ன அனைத்துமே ஒருவகையில் ஒரு சிறந்த ஆளுமையினை உருவாக்குவதற்கான முயற்சியே ஆகும்.

**துணைநூற் பட்டியல்**


1. திருக்குறள் (புதிய உரை), புலியூர்க்கேசிகன் உரை பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. மேலது
3. மேலது
4. மேலது
5. மேலது
6. மேலது
7. மேலது
8. மேலது
9. மேலது
10. மேலது
11. மேலது
12. மேலது
13. மேலது
14. மேலது
15. மேலது